**கவனிக்க** .- *27.02.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1850 - 2014 පෙබරවාරි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.02.13**

*1850 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பட்டியல் | 22 |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2014, மாச்சு மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

### மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில் ஒடுக்குவதற்கான அறிவித்தல் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் கொழும்பில் நடைபெறுவது)

கொழும்பு 03, காலி வீதி, 451, என்ற முகவரியைச் சார்ந்த பிசி ஹவுஸ் பிஎல்சி என்ற விடயத்திலும்;

வழக்கு இல. : சிஓ 57/2013
தன்மை : முடிவுறுத்தல்

அத்துடன்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழும் நியதிக்கமைவாகவும் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான விண்ணப்பத்தின் விடயத்திலும்-

1. ஐக்கிய அமெரிக்க இராச்சியம், மியாமி எவ்எல் 33172, ஸ்ரீற் சூட் 110, என் டபிள்யு 21, இல. 10850 என்ற முகவரியைச் சார்ந்த வேர்ல்வைட் கொம்பியூட்டர்ஸ் எல்ஜசி
கொழும்பு 10, நம்யா பிளேஸ், தேசிய வீடமைப்புத் திட்டம் பீ2 2/4 என்ற இலக்கத்தைச் சார்ந்த நடராஜா உதயகுமார் என்ற சட்டத்தரணி தோற்றுகின்றார்.

2. ஐக்கிய அரபு இராச்சியம் அல் - காய்மா, ஆர்ஏஎஸ், த. பெ. இல. 45158 என்ற முகவரியைச் சார்ந்த ரெக் அவ்ரிக்கன் டிஸ்றிபியூசன் எவ் இசட்ஈ, ஐக்கிய அரபு இராச்சியம்

கொழும்பு 10, ரம்யா பிளேஸ் தேசிய வீடமைப்புத் திட்டம், பீ2 2/4 என்ற இலக்கத்தைச் சார்ந்த சட்ட ரீதியாக நியமிக்கப்பட்ட நரசிம்மன் நடராஜா உதயகுமார் என்ற சட்டத்தரணி தோற்றுகின்றார்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பிசி ஹவுஸ் பிஎல்சி என்ற கம்பனியை மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தால் (அதன் குடியியல் நியாயதிக்கத்தைப் பிரயோகிக்கையில் கொழும்பில் நடைபெறுவது) ஒடுக்கப்படுவதற்கான விண்ணப்பம் 2013, திசெம்பர் 19 ஆந் திகதி மனுதாரர்களான ஐக்கிய அமெரிக்க இராச்சியம் எவ்எல், 33172, மியாமி, ஸ்ரீற் சூட் 110, என்டபிள்யு 21, 10850 ஆம் இலக்கத்தைச் சார்ந்த வேர்ல்ட்வைட் கொம்பியூட்டர்ஸ் எல்ஐசி மற்றும், ஐக்கிய அரபு இராட்சியம், அல்-காயமா, ஆர்ஏஎஸ், 45158 என்ற முகவரியைச் சார்ந்த ரெக் அவரிக்கன் டிஸ்ரிபியூசன் எல் இசட்ஈ, யுஏஈ ஆகிய கம்பனிகளால் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டன என்றும் இதில் குறித்த மனு 2014, மாச்சு 3 ஆந் திகதி சொல்லப்பட்ட நீதிமன்றத்தின் முன் விசாரிக்கப்படுதவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளதெனவும் சொல்லப்பட்ட மனு சம்பந்தமாக சொல்லப்பட்ட கம்பனிகளுக்கு கடன்கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது ஆதரவு அல்லது எதிர்ப்புக் கட்டளை பிறப்பிக்க விரும்பின் விசாரணையின் போது நேரடியாகவோ அல்லது அந்நோக்கத்திற்காக பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம் எனவும் சொல்லப்பட்ட கம்பனிகளுக்கு எந்தவொரு கடன்கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவருக்குத் தேவைப்படின் மனுவின் ஒரு பிரதி கீழே கையொப்பமிட்டவரினால் அதற்குரிய கட்டணத்தின்படி பணக்கொடுப்பனவின் பிரகாரம் வழங்கப்படுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கையொப்பமிட்டவர்:
எம். ஐ. எம். இஷார்,
இல. 18, பெர்ணான்டோ கார்டன்ஸ், தெஹிவளை.

**குறிப்பு**.- மேற்குறித்த மனுவின் விசாரணையின்போது, நேரில் சமூகமளிக்க எவராவது நோக்கம் கொள்வாராயின் அவர், அவரின் நோக்கம் பற்றிய அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து, மேற்குறித்த எம். ஐ. எம். இஷாருக்கு நேரில் அல்லது கடித மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். நபரின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் குறிப்பிடப்படல் வேண்டும், அல்லது குழுமமாயின் குழுமத்தின் பெயர் முகவரியுடன் நபரினால் அல்லது குழுமத்தினால் அல்லது அவரது அல்லது அவர்களின் சட்டத்தரணியால் (அவ்வாறு இருப்பின்) கையொப்பமிட்டு நேரடியாக சேர்ப்பிக்கப்படல் வேண்டும் அல்லது தபால் மூலம் அனுப்பப்படுவதாயின், மேலே பெயர் குறிப்பிட்டவரை அடையும் வகையில் போதுமான அளவு நேரத்துடன் 2014, மாச்சு இரண்டாம் திகதியன்று பிற்பகல் 6 மணிக்குப் பிந்தாமல் அனுப்பப்படல் வேண்டும்.

மனுதாரர்களுக்கான சட்டத்தரணி.

2-311

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.